

அருப்புக்கோட்டை தொகுதிக்குட்பட்ட பந்தல்குடி ஊராட்சியில், காந்தி ஜெயந்தியை முன்னிட்டு, நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் கலந்து கொண்டு மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

## தமிழ்நாட்டில் 10ஆம் தேதி வரை மழைக்கு வாய்ப்பு!

சென்னை, அக்.5-

தமிழ்நாட்டில் தென்காசி, நெல்லை, கன்னியாகுமரி ஆகிய 3 மாவட்டங்களில் இன்று ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அக்.10ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு எனவும் சென்னையில் 2 நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும், சில இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்பு எனவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

### அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் சிறப்புரை!

# தென்காசி வடக்கு மாவட்டக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!



நெல்லை.அக்.5

தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம் சங்கரன்கோவிலில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள கணபதி மினி மஹாலில் வைத்து நாளை (06.10.2023-வெள்ளிக்கிழமை மாலை 5 மணி அளவில் மாவட்ட அவைத் தலைவர் பத்மநாபன் தலைமையில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் வருவாய் மற்றும்

பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார். என தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்எல்ஏ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட,கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர,பேரூர், கழகச் செயலாளர்கள் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்

பொருள்:

வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல்.

கூட்டுறவு சங்கத் தேர்தல் குறித்து.

கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா.

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் சிறப்புரை!

# தென்காசி தெற்கு மாவட்டக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் வெ. ஜெயபாலன் அறிக்கை!



தென்காசி, அக்.5-

தென்காசி தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்

தெற்கு மாவட்டம் ஆலங்குளம் ஏ.ஜே.மகாலில் நாளை (06.10.2023 -வெள்ளிக்கிழமை காலை 10 மணி அளவில் மாவட்ட அவைத் தலைவர் சுந்தர மகாலிங்கம் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார் என தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல்.

கூட்டுறவு சங்க தேர்தல் குறித்து.

கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா.

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஆண்டிபட்டி அருகே சாலையில் தேங்கிய மழைநீர்!

# கிராம மக்களின் கோரிக்கை ஏற்று மகாராசன் எம்.எல்.ஏ. நடவடிக்கை!

தேனி, அக்.5-

ஆண்டிபட்டி அருகே நாச்சியார்புரம் கிராமத்தில் சாலையில் மழைநீர் குளம் போல் தேங்கியதால் கிராம மக்கள் அவதியடைந்து வந்தனர். இது குறித்து ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி உறுப்பினர். மகாராசனிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. உடனடியாக மழைநீர் தேங்காத வகையில் சாலையை உயர்த்தி அமைக்கும் பணி தொடங்கப்பட்டு அளவீடு செய்யும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே உள்ள நாச்சியார்புரம் கிராமத்தில் சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். தேனி மதுரை நெடுஞ்சாலையையும், ஆண்டிபட்டி வைகைஅணை சாலையையும் இணைக்கும் பகுதியில் இந்த நாச்சியார்புரம் கிராமம் அமைந்துள்ளது. இணைப்பு சாலையில் ரெங்கநாதபுரம், நாச்சியார்புரம், ரெங்கசமுத்திரம், ஜம்புலிபுத்தூர் உள்ளிட்ட கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களை சேர்ந்த மக்கள் நாச்சியார்புரம் சாலையை தான் பயன்படுத்தி வருகின்றனர். இந்த நாச்சியார்புரம் கிராமத்தில் இருந்து ரெங்கநாதபுரம் கிராமம் செல்லும் பகுதி வரை சுமார் ஒரு கிலோமீட்டர் தொலைவில் தாழ்வான சாலையாக உள்ளது.

இதனால் மழைக்காலங்களில் மழை நீர் அதிகப்படியாக தேங்கி கிராம மக்கள் அவதி அடைந்து வந்தனர். அதிகமான மழை நீர் தேங்கி நிற்பதால் அந்த மழைநீர் வற்றும் வரை பொதுமக்கள் அந்த சாலையை பயன்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. ஆண்டு தோறும் மழை பெய்யும் போதெல்லாம் இந்த நிலை ஏற்பட்டு வருவதால், பொதுமக்கள் மிகவும் பாதிப்படைந்தனர். இந்த சாலையை உயர்த்தி அமைக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் பல ஆண்டுகளாக கோரிக்கை வைத்து வந்தனர்.

இதுகுறித்து ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் எம்.எல்.ஏ. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் ஏ.வா வேலுவிடம் நேரில்சந்தித்து கோரிக்கை வைத்ததின் அடிப்படையில், ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 1 கோடி 70 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகள் தற்போது நடைபெற தொடங்கியுள்ளது.

சாலை பணிகளில் முதற்கட்டமாக ஆண்டிபட்டி நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் இடத்தை அளவீடு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஆண்டிபட்டி நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் திருக்குமரன் தலைமையில் அதிகாரிகள் சாலையை எவ்வளவு தூரத்திற்கு உயர்த்த வேண்டும், அங்கு பாலம் அமைக்கும் இடம், சாலை ஓரத்தில் அமைந்திருக்கும் கிணறு களுக்கு விபத்துக்கள் ஏற்படாத வகையில் தடுப்புகள் அமைப்பது குறித்து அளவீடு செய்து ஆய்வு செய்தனர்.

மேலும் இந்த சாலை ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கும், அதில் மழைநீர் வெளியேற்ற ஒரு பாலம், பள்ளிகளுக்கு அருகில் பேவர் பிளாக் கற்கள், சாலை ஓரத்தில் அமைந்துள்ள கிணற்று பாதுகாப்பு தடுப்பு சுவர்களும் அமைக்கப்பட உள்ளது. இதில் உதவி பொறியாளர் முருகேஸ்வரன் மற்றும் சாலை ஆய்வாளர்கள் சாலை பணியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கையில் மகாத்மா காந்தியின் 155-வது பிறந்தநாளை முன்னிட்டு காந்திஜி திருஉருவச்சிலைக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித், சிவகங்கை நகர்மன்ற தலைவர் துரைஆனந்த்,காட்சியகங்கள் ஊராட்சி மன்றத் தலைவர் கே.எஸ்.எம். மணிமுத்து,ஜெயராமன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.




தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி,மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தென்காசி தெற்கு மாவட்டக் கழக அலுவலக கலைஞர் அறிவாலயத்தில் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் துணைச் செயலாளர் கனிமொழி முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வில் மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ராணி பங்கேற்று வருகிற 7 தேதி திருச்சியில் நடைபெறும் ஆலோசனை கூட்டம் தொடர்பாகவும் 14ஆம் தேதியை சென்னையில் நடைபெறும் மகளிர் உரிமை மாநாடு குறித்தும் ஆலோசனைகளை வழங்கினார். உடன் மகளிர் அணி நிர்வாகிகள் சங்கீதா, திவ்யா,பேபி ரசப் பாத்திமா, வைத்தீஸ்வரி, சரஸ்வதி, கற்பகசெல்வி,சுசீலா, ராஜேஸ்வரி,மாரிச்செல்வி,முத்து லதா,சபர் நிஷா,பாண்டியராணி, மாரியம்மாள்,பொன்மாரி, சுப்பம்மாள் உள்பட பலர் உள்ளனர்.

# தாய் நாட்டை தலைநிமிரச் செய்வோம்!

என் இனிய தமிழ் சொந்தங்களே.....என் நேசத்துக்கும் பாசத்துக்கும் உரிய இந்திய மக்களே.......! செடி ஒன்று முளைத்தால் அது மரமாக வேண்டும் அல்லது உரமாக வேண்டும். இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்கள் ஆலகால விஷத்தை குடித்து விட்டு இந்திய மக்கள் மாண்டு போக வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

1967 சட்டசபை தேர்தலில் தமிழ் மாநிலம் எப்படி ஒரு வரலாற்றை புரட்டிப் போட்டதோ அதே நிலையை 2024 நாடாளுமன்றத் தேர்தலில் இந்திய நாடு வரலாற்றை புரட்டிப் போட்டே ஆக வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது. ஒன்றிய அரசியல் இந்த மாற்றம் ஏற்படாவிட்டால் இந்தியாவின் ஜனநாயகம் சவக்குழிக்குள் போய்விடும். பஞ்சமும் பட்டினியும் தலை விரித்தாடும். ஏழைகளின் குரல்வளைநெரிக்கப்படும். பணக்காரர்கள் கார்ப்பரேட்டுகள் கூத்தடிப்பார்கள். குத்தாட்டம் போடுவார்கள். அவர்களின் கால்களின் கீழே சமநீதி சமதர்மம் மதச்சார்பற்ற தன்மை அனைத்தும் மிதிபட்டு அழிந்து போகும். அகங்காரம் அக்ரஹாரத்தில் கோரத்தாண்டவம் ஆட ஆரம்பித்து விடும். சனாதன தர்மம் புதுப்புது வியாக்கியானங்களுடன் மாற்று மதங்களையும் அரசியல் கட்சிகளையும் ஏப்பம் விட்டே அழித்துவிடும். தற்போது பாராளுமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள செங்கோலை ஏந்துகின்ற ஒரு இந்திய மன்னர் இந்த மண்ணை ஆளத் தொடங்குவார். அது ஜார் மன்னனின் கொடுங்கோல் ஆட்சியை விட கொடுமையானதாக இருக்கும். மடாதிபதிகளும், மைனாரிட்டி சமுதாயமும் மன்னருக்கு சாமரம் வீசி மகிழ்விப்பார்கள்.

சுதந்திரப் போராட்டம்,சோசியலிசம், உரிமைக்குரல், மதசார்பின்மை, மாநில சுதந்திரம், உரிமைக்குரல், ஜனநாயகம் இவையெல்லாம் தண்டனைக்குரிய வார்த்தைகளாக கருதப்பட்டு அகராதியிலிருந்து அகற்றப்பட்டுவிடும். மாநில சட்டமன்றங்கள் மடங்களாக மாற்றப்பட்டு மடாதிபதிகள் கைகளிலே ஒப்படைக்கப்படும். மாநில மொழிகள் பேசுகின்றவர்கள் குற்றவாளிகளாக கருதப்பட்டு சிறைகளிலே அடைக்கப்படுவார்கள். பாலுக்கு அழுகின்ற குழந்தையிடம் இந்தியில் அழுதால் தான் பால் தருவோம் என்கிறார் ஷா அவர்கள். உரத்துக்காக காத்திருக்கும் விவசாயியிடம் எங்கள் புதிய விவசாய சட்டங்களை ஏற்றுக் கொள்ளுங்கள் உரம் தருகிறோம் என்று சொல்வார்கள். டாக்டருக்கு படிக்க விரும்புகின்ற மாணவ - மாணவியரிடம் எங்கள் நீட் சட்டத்தைஒப்புக் கொள்ளுங்கள் சீட் தருகிறோம் என்று சொல்வார்கள்.

மாநில உரிமைகளைக் கேட்டால் ஒரே ரேஷன் கார்டு திட்டத்திற்கு சம்மதம் தந்தால் உரிமை பற்றிப் பேசலாம் என்கிறார்கள். தாகத்துக்கு தண்ணீர் கேட்டால் ஒரே தேர்தல் என்ற எங்கள் சட்டத்தை ஏற்றுக் கொள்; ஆற்று நீர் பற்றிப் பேசலாம் என்கின்றனர். ஜி.எஸ்.டி. வரியில் மாநில பங்கை தாருங்கள் எனக் கேட்டால் எங்கள் புதிய குடியுரிமை சட்டத்தை அமல்படுத்திய பின் பார்க்கலாம் என்கிறார்கள்.

இந்திய அரசியலமைப்பு சட்டப்படி மதச்சார்பின்மையை கடைப்பிடியுங்கள் என்று சொன்னால் சனாதன தர்மத்தை ஏற்றுக் கொள் என்கிறார்கள். ஏடாகூடமான ஒன்றிய அரசின் கடந்த பத்தாண்டு ஆட்சி பல கோணங்களிலே ஜனநாயக விரோதமாகப் போகிறது என்பதை உலக அரங்கமே பேசுகிறது. அது உங்கள் காதுகளில் விழவில்லையா பாரத வாசிகளே! அதிகார துஷ்பிரயோகம் எல்லை கடந்து போய்விட்டதை உணரவில்லையா? இவற்றை இந்திய மக்கள் அறியாமல் இல்லை. அறிவார்கள்.

ஆனால் முற்றும் நனைந்த நிலையில் முக்காடு எதற்கு என்ற கேவலமான எண்ணத்தை ஏற்றுக் கொள்ள நினைக்கிறார்கள். கடந்த 10 ஆண்டுகளில் தாங்கள் பறி கொடுத்துவிட்ட அனைத்து சுதந்திரங்களையும் நினைத்து அஞ்சுகிறார்கள். பயம் அவர்களை வாட்டுகிறது. மடாதிபதிகள் இன்றைய நிலையில் மாநில அமைச்சர்கள் தலைகளுக்கே விலை வைக்கும் போது நாம் எம்மாத்திரம் என அவர்கள் நினைப்பது நியாயம்தானே? நீங்களும் இதனையே நினைக்கலாம். அச்சப்படலாம். ஒதுங்கியும் போய் விடலாம். நேற்று லட்சக்கணக்கான நமது மூதாதையர் உயிர் பலி கொடுத்து பெற்றுத் தந்த நம் உயிர் மூச்சான சுதந்திரத்தை இழப்பதற்கு நீங்கள் யார்? அந்த உரிமையை உங்களுக்குத் தந்தது யார்? என்று நாளைய நமது வாரிசுகள் உங்களைப் பார்த்துக் கேட்டால் அவர்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

மடாதிபதிகளுக்கும் மதவாதிகளுக்கும் மைனாரிட்டி சமுதாயத்துக்கும் பயந்து எங்கள் சுதந்திரத்தை அடமானம் வைக்க உங்களுக்கு எப்படி மனது வந்தது. நீங்கள் போராடிப் பெறாத சுதந்திரம் என்பதனால் அதனை பறிபோக விட்டு விட்டீர்களா எனக் கேட்க மாட்டார்களா? இப்படி ஒரு கேவலமான நிலை நமக்கு வேண்டாம் என்ற எண்ணம் உங்களுக்கு வருமா வராதா? பதில் சொல்லுங்கள் பாரதவாசிகளே? பெரும்பான்மையான நடுத்தர வர்க்கத்தினர் தங்களின் வாழ்க்கையின் பாதுகாப்பு மட்டுமே முக்கியம் என கருதுவர். இன்னும் சிலர் அது வரை தான் சேமித்து வைத்த சேமிப்புகளை இழக்கக்கூடாது; அதை வைத்து அவமானப்படாமல் வாழ்க்கையை ஓட்டிவிட வேண்டும் என நினைப்பார்கள்.

ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன - நாம் சிக்கலில் மாட்ட வேண்டாம் என்று நினைத்து அராஜக அரசியலை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் கடந்த 10 ஆண்டு கால ஒன்றிய அரசின் ஆட்சியில் நடுத்தர மக்களின் கஷ்ட நஷ்டங்கள் நாளுக்கு நாள் ஏறுமுகமாகவும்,வாழத் தகுதியற்ற நிலையும், அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றங்களும், ஒன்றிய ஆட்சியாளர்களின் அடாவடித்தனமான புதிய சட்டங்களும்...பொறுப்பற்ற ஆட்சி முறையும் மக்களை எரிச்சல் அடைய செய்திருப்பதை உலகமே பேசுகிறது. இது போதாது என்று மாநில அரசியல் வியாபாரிகள் தங்கள் தங்கள் கட்சியைப் பற்றியும் கூட்டணி பற்றியும் அதில் கிடைக்கப் போகும் லாபத்தை பற்றியுமே கவலைப்படுகிறார்கள். இந்தியாவின் அரசியல் சிஸ்டம் தடம் மாறிப் போய்க் கொண்டிருப்பது பற்றி அவர்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. மாற்றம் முன்னேற்றம் என்று பேசியவர்களே அதையெல்லாம் மறந்து விட்டார்கள். மக்களையும் தவறாக வழி நடத்தி தாமும் தடம் மாறிப் போய்க் கொண்டிருக்கின்றனர். அவர்களை நம்பினால் அசலுக்கே மோசம் விளையும்! இவற்றை வென்றிட நமக்கு இருக்கின்ற ஒரே வழி...ஒருவிரல் புரட்சியே! அதனை செய்யக்கூடிய வலிமை இன்றைய சூழலில் திராவிட அரசியலுக்கு மட்டுமே உண்டு! தாய் நாட்டை மீட்க வேண்டுமானால் இந்தியக் கூட்டணியை வழிநடத்தும் தலைவர்களால் மட்டுமே முடியும்! மீண்டும் சொல்கிறேன் 1967 சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் எதனைச் செய்து மாநிலத்தை தலை நிமிரச் செய்தார்களோ.....அதையே இந்திய மக்கள் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் செய்து நமது பாரத மாதாவின் ஜனநாயகத் தாலியை காப்பாற்ற வேண்டும்.



**வி.சி.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்



மதுரை மாநகராட்சி எல்லீஸ் நகர் 60வது வார்டில் வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. பாமா முருகன் எம்.சி. ஏற்பாட்டில் பகுதி சபை கூட்டம் நடைப்பெற்றது. மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. இந்த கூட்டத்தினை துவக்கி வைத்து சிறப்பித்தார். உடன் வட்டம்,பகுதி மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், மண்டல குழு தலைவர், காவல்துறை அதிகாரிகள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் வார்டு பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களின் குறைகளை எடுத்துரைத்தனர். அந்த இடத்திலேயே குறைகளுக்கு உடனடி தீர்வு காண உரிய துறை அதிகாரிகளிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்பட்டது.